1975 நவம்பர் 7]

தரங்கம்பாடியிலுள்ள ஆய்வு மாளிகை

* 234 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தரங்கம்பாடி கோட்டையிலுள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்களால் கட்டப்பட்ட கோட்டை இருக்கிறது. அது கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் செப்பனிடப்பட்டு சிறப்பாக இருக்கிறது. நான்கைந்து ஆண்டு களுக்கு முன்னால் அது செப்பனிடப்பட்டது. அதை மேலும் விரிவுபடுத்த, அதில் மேலும் கவனம் செலுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் அங்கே சென்றபோது அது பழுதுபார்க்கப் பட்டது. பழுதுபார்க்கப்பட்டு நான்கைந்து ஆண்டுகள் ஆகி விட்டதால், மேற்கொண்டு ரூ. 13,500 செலவில், சுவர்களுக்கு வர்ணம் பூசுவது, செப்பனிடுவது போன்ற வேலைகளை மேற்கொள் வதற்கு சம்பந்தப்பட்ட பொறியாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

ALONE TRIUMPHS

Assistance for artisans.

* 235 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Handicrafts Development Corporation has proposed to give incentive bonus to artisans; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) தமிழ்நாடு கைவினைப்பொருள் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர்கள் குழு 9—5—1974 அன்று நடந்த கூட்டத்தொடரில்,